**மஹர பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| தொடர்பு இலக்கம் | அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2(உ) | ஆயர்வேத இருப்பு கணக்கை தயாரிக்கும் போது நடப்பாண்டில் நுகரப்பட்ட இருப்பின் பெறுமதி ரூபா 1,108,230 ஆக பதியப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான நுகர்வு இருப்பு ரூபா 1,033,609 ஆனமையால் வேறுபாடு ரூபா 74,621 ஆகும். | சரியான இருப்பு அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| 1.6.2(ஊ) | நாட்குறிப்பு இலக்கம் 1 இன் மூலம் ஆரம்ப மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் முன்னர் காணப்படாத ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் ரூபா 26,364,842 ஆரம்ப மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் பெற வேண்டிய ரூபா | புதிய கணக்கீட்டுக் கொள்கை மற்றும் கணக்கீட்டு விதிகள் தொடர்பாகநடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கு இணங்க உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் |

| | |
|---|---|
| 69,203,620 மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 42,388,781 மீதி காணப்பட்டதுடன் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக கணக்கீட்டு நியம இலக்கம் 15.13 இற்கும் 15.1 இன் நியதிகளுக்கு முரணாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | சீராக்கப்பட்டிருந்தது. |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்கீட்டு நியமம் | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 6.20 | மீளாய்வாண்டின் சொத்துக்களின் பெறுமாதனத்தேய்வு சதவீதம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை | 2022 ஆம் ஆண்டு முதல் சரி செய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| 9.3 மற்றும் 9.4 | கழிவு பொருள் பதிவேடு, 105 நிறுவனங்கள், 2021 ஆம் ஆண்டிற்குரியதாக இருந்த போதிலும் அறவிடப்படாத கழிவுப் பொருள் வரிப் பெறுமதி ரூபா 559,950 தொகை விதிக்கப்பட்ட காலப்பகுதியில் மிகைக் கட்டணமாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ளவாறு இறுதியில் மீதியாகவுள்ள பெற வேண்டிய சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| 3.6 | நடப்பாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்குரிய காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய சமமாகக் கூடிய காலப்பகுதி தொடர்பாக இணக்கம் செய்யக்கூடிய தகவல்கள் சமமான ரீதியில் விரிவான வருமானக் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களின் பெறுமதி ரூபா 18,283,287 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 18,370,206 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 86,919 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு காலப்பகுதிக்குரிய வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆயர்வேத இருப்பு இழப்பீட்டுப் பெறுமதி ரூபா 55,970 தொகை சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றிலும், விரிவான வருமானக் கூற்றிலும் இருப்பு இழப்பீடாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக நுகரப்பட்ட ஆயர்வேத இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | இருப்பு கொடுக்கல் வாங்கல்களை சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த கட்டிடம் ரூபா 8,400,000 தொகையும், இயந்திரத்திற்கான ரூபா 10,300,000 தொகையும் ஆக இருந்தது. கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,161,777 தொகை கட்டிடப் பெறுமதி ரூபா 1,079,600 தொகை மற்றும் இயந்திரப் பெறுமதி ரூபா 82,177 ஆக நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | நூலகப்புத்தக பெறுமானத் தேய்வு ரூபா 1,359,070 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டின் படி கடன்பட்டோர் மீதி ரூபா 18,399,337 தொகையில் 01 இற்கும் 03 இற்கும் வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 13,396,032 ஆகும். இந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதியை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதிசேர் வரியின் பெறுமதி ரூபா 2,061,792 தொகையில் வருடமொன்றிற்கு மேற்பட்ட பெறுமதி ரூபா 1,827,851 ஆக இருந்ததுடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | பெறுமதிசேர் வரித் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டின் படி நானாவித கடன்கொடுத்தோர் மீதி ரூபா 116,100.458 தொகையில் ஒரு ஆண்டிற்கு குறைந்த ரூபா 59,016,015 தொகை, 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 57,084,443 காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன்கொடுத்தோர் மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதி தொடர்பாக பரீட்சித்து செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கும் பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்குமாயின் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு மீதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவமற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 109,362,584 ஆக இருந்த போதும், பட்டோலையின் பிரகாரம் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 77,476,218 ஆனமையால் ரூபா 31,886,366 வேறுபாடு காணப்பட்டது. | 02 கணக்கு விடயங்கள் முன்னைய ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற வேறுபாடாக இருந்ததுடன் 02 கணக்கு விடயங்கள் பற்றுச்சீட்டு விநியோகிக்கும் போது வருமானத் தலைப்பு மாற்றமடைந்திருந்த மையால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு அறிக்கைகள் அதற்குரிய பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரியான மீதி பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1)(ஆ) பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய புதிய வீதிகள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு பெயர் பதிவேடு வர்த்தமானி மூலம் பிரசுரித்து சகல வீதிகளும் பிரதேச சபையின் உரித்தாக கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | வீதிகளை அளப்பதற்கு கணிசமான தொகையொன்று செலவாகின்றமையால் வருடத்திற்கு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு 10 வீதிகளே மாத்திரமே முடியுமாக இருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக 10 வீதிகளை அளவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை நிதி நிர்வாகத்திற் குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி 73 | நிதி விதியின் பிரகாரம் சான்றுப்படுத்தலின் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் 12 வழங்குனர்களுக்குரிய ரூபா 433,986 பொருட்கள் மற்றும் சேவைகள் களஞ்சியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு முன்னர் | தகவல்களை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதி கட்டுப்பாட்டிற்குரிய விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 385,466 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் காலாவதியாகியிருந்த ரூபா 2,984,734 பெறுமதியுடைய 10 சதவீத நிறுத்தி வைத்தல் வைப்புக்களின் 08 மீதிகள் மற்றும் கேள்வி வைப்புக்களின் 75 மீதிகளாக 113 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017, 2018 ஆம் ஆண்டுகளில் வைப்பு மீதிகளுக்குரிய வைப்பாளர்களுக்கு அறிவித்து அந்த தினங்களில் அந்த நிறுத்தி வைத்தல் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மிகுதிப் பணம் சபை அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 85,829,929 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,463,249 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 28,838,295 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையே, 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே, 05 இற்கும் 10 | புதிய தரவுகளை உள்ளடக்கும் போது ஏற்பட்டுள்ள கைதவறுகள் மற்றும் மதிப்பீட்டு ஆவணங்களில் குறைபாடுகளின் அடிப்படையில் (ஆதனங்கள் தவறவிடல், புழக்கத்தில் இல்லாத இலக்கங்களுக்கு சிட்டையிடல், ஒரே ஆதனங்கள் இரு தடவை | நிலுவை ஆதனவரி மற்றும் வரி வருமானங்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கும் இடையே மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ஆதனவரி பெறுமதிகள் முறையே ரூபா 25,136,980 தொகை, ரூபா 763,279 தொகை, ரூபா 624,337 தொகை மற்றும் ரூபா 2,313,700 ஆக இருந்ததுடன் அந்த பெறுமதிகளை அறவிடுவதற்காக பிடியாணை விதித்தல் உள்ளடங்கிய நடவடிக்கைகள் போன்ற சட்டரீதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | சிட்டையில், ஒரே ஆதனம் வீதிகள் இரண்டிற்கு மதிப்பீடு செய்தல்) சரி செய்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு களத்தில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் தொலைபேசி கோபுரங்களில் பொருத்தப்பட்ட போட்டி மாற்றல்களுக்குரிய நிறுவனத்திலிருந்து வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் 12 தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களிலிருந்து ரூபா 36,000 நிலுவை வருமானம் 2022 மே 19 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் பாரதி ஏயார்டெல் கம்பனியிலிருந்து ரூபா 15,000 தொகையும், லங்கா பெல் கம்பனியிலிருந்து ரூபா 3,000 தொகையும், இலங்கை மொபிடெல் நிறுவனத்திலிருந்து ரூபா 18,000 தொகையும் ஆன வரிப்பணம் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அந்த பணத்தை செலுத்துமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு தொலைபேசியில் விசாரண செய்து காசோலை தபாலிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி பதிவேட்டின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளின் எண்ணிக்கை ரூபா 7,943 ஆகவும், அதன் தனியார் வீதிகளும் காணப்பட்டிருந்ததுடன் அவற்றை தனியாக இனங்காணாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2021 திசெம்பர் | இந்த தினங்களில் சபை வீதிகள் இனங்காணப்படுகின்றது. தற்போது வரையில் 24 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்காக 10 வீதிகளுக்கு நில | தனியார் மற்றும் சபை வீதிகளை தனியாக இனங்கண்டு நிலவரைபடம் தயாரித்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| 31 ஆந் திகதி வரையும் அதில் 24 வீதிகள் மாத்திரமே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தமையும் 2022 மே 31 ஆந் திகதி வரையில் அதில் 10 வீதிகளுக்கு மாத்திரம் நிலவரைபடம் தயாரிக்கப்பட்டிருந்தமையும், 10 வீதிகளுக்கு நிலவரைபடம் தயாரிக்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | வரைபடம் தயாரிக்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் | | |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 154 உம், உள்ளபடியான பதவியணியினர் 131 உம் ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 23 ஆக காணப்பட்டது. | ஆயர்வேத மருத்துவ உத்தியோகத்தர், நூலகர், சுடலைக்கூட செயற்படுத்துனர் என்பவற்றின் வெற்றிடம் தொடர்பாக காலாண்டு அறிக்கை மூலம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br>முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2021 ஏப்ரல் 22 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற போதிலும் ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டுள்ளமையால் ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது.<br>முன்பள்ளி உதவியாளர் பதவி 2012 பெப்ரவரி 28 முதல் வெற்றிடமாக உள்ளது.<br>அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பதவிகளை ஈடுபட்டிருப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளமையால் மீண்டும் ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) ஊழியர் கடன்

--------------------------

| | | |
|---|---|---|
| 2017 யூன் முதல் 2021 திசெம்பர் வரையான காலத்தில் ஓய்வுபெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 799,729 தொகையும், 2021 சனவரி முதல் நவம்பர் வரையான காலத்தில் மரணமடைந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 633,635 தொகையும் ஆன கடன் மற்றும் முற்பண மீதிகளினது அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. | 06 உத்தியோகத்தர் களிடமிருந்து கடன்மீதி ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |